உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 13.06.2026 • மலர் 04 • இதழ்: 164 • சனிக்கிழமை • Edition : Nagercoil • 13.06.2026 • Vol : 04 • Issue : 164 • Page : 4 • Rs. 5/-

# மேகதாது அணை திட்டத்திற்கு அனுமதி

## பிரதமர் மோடியை சந்தித்து டி.கே.சிவக்குமார் கோரிக்கை



பெங்களூரு, ஜூன் 13

டெல்லியில் நேற்று நடைபெற்ற 11வது நிதி ஆயோக் குழு கூட்டத்தில் இந்தியாவின் 28 மாநிலங்களின் முதல் மந்திரிகளும் கலந்து கொண்டனர். கடந்த கால கூட்டங்களில் சில முதல் மந்திரிகள் பங்கேற்காமல் இருந்தனர். கர்நாடக மாநில முன்னாள் முதல் மந்திரி சித்தராமையா, மேற்கு வங்காள முன்னாள் முதல்மந்திரி மம்தா பானர்ஜி போன்றோர் புறக்கணித்தனர்.

ஆனால் நேற்றைய கூட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டனர். கர்நாடக முதல்மந்திரி டி.கே.சிவகுமார் கலந்து கொண்டார். யூனியன் பிரதேசங்களைப் பொறுத்தவரை கவர்னர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். நிதி ஆயோக் கூட்டத்தில் அனைத்து மாநில முதல்மந்திரிகளும் தங்களது மாநிலங்களின் வளர்ச்சிக்கு தேவையான கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

இந்த நிலையில், மேகதாது அணை திட்டத்திற்கு அனுமதி வழங்க கோரி பிரதமர் மோடியை நேரில் சந்தித்து கர்நாடக முதல்மந்திரி டி.கே.சிவக்குமார் கோரிக்கை வைத்துள்ளார். இதுதொடர்பாக அவர் பிரதமர் மோடியிடம் அறிக்கை ஒன்றை அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில், "கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது திட்டத்தை அமல்படுத்துகிறோம். இதற்கு மத்திய அரசின் வனம், சுற்றுச்சூழல் துறையின் அனுமதி தேவை. இந்த அனுமதியை விரைவாக வழங்க வேண்டும்.

மேகதாது அணை திட்டத்திற்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. எந்த தடையும் இல்லாததால், இத்திட்டத்திற்கு விரைந்து அனுமதி வழங்க வேண்டும்" என்று அதில் தெரிவித்துள்ளார்.

இதைபோல மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமனையும் டி.கே. சிவக்குமார் சந்தித்து பேசியுள்ளார். அப்போது அவரிடமும் மேகதாது திட்டம் குறித்த அறிக்கையையும் சமர்பித்துள்ளார்.

## ஏழைக்கு ஒரு நீதி, பணக்காரர்களுக்கு ஒரு நீதியா என பொதுமக்கள் ஆவேசம் பரபரப்பு!!



திருப்பூர், ஜூன் 13

திருப்பூர்மாநகராட்சி 10வது வார்டுக்கு உட்பட்ட அங்கேரிபாளையம், திருவள்ளுவர்நகர், முத்துநகர், ஆத்து பாளையம் உள்ளிட்ட இடங்களில் செல்லும் நல்லாறு வழித்தடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்ட 147வீடுகளை இடித்து அகற்றுவதற்கு வருகை தந்த பவானிசாகர் அணைக்கோட்டம் பொதுப்பணித் துறை நீர்வளத்துறைஅதிகாரிகள், போலீசார் உடன் வந்தபோது பொதுமக்கள் கடும் எதிர்ப்பு. 2வீடுகள் இடித்த அகற்றம்.

நல்லாற்றை பல அடி தூரத்திற்கு ஆக்கிரமிப்பு செய்து காம்பவுண்ட் சுவர் கட்டி பயன்படுத்தி வரும் பின்னலாடை ஏற்றுமதி நிறுவனம் ஆக்கிரமிப்பை அகற்றிய விட்டு பின்னர் எங்களது வீடுகளை இடியுங்கள் எனக் கூறி ஏழைக்கு ஒரு நீதி, பணக்காரர்களுக்கு ஒரு நீதியா என பொதுமக்கள் ஆவேசம் பரபரப்பு.

திருப்பூர் மாநகராட்சி உட்பட்ட 10 வது , 11வது வார்டு பகுதிக்கு உட்பட்ட அங்கேரிபாளையம், திருவள்ளுவர் நகர் ,முத்து நகர், ஆத்துப்பாளையம், சத்யா காலனி உள்ளிட்ட பல்வேறு இடங்கள் உள்ளன, இதில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளில் மக்கள் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் கோவை மாவட்டம் அன்னூரில் துவங்கி கருவலூர் அவிநாசி திருமுருகன் பூண்டி வழியாக அங்கேரிபாளையம், பிச்சம்பாளையம், போயம்பாளையம் மற்றும் வெங்கமேடு ஆகிய பகுதிகளில் சென்று நஞ்சராயன் குளத்தை நிரப்பி இறுதியாக உபரி நீர் நொய்யல் ஆற்றில் கலக்கிறது.

16 கிலோமீட்டர் தூரம் நீளமுள்ள நல்லாறு ஒரு காலத்தில் நன்னீராகவும் இருந்துள்ளது, ஆற்றின் அருகே குடியிருப்புகள், தொழிற்சாலைகள் அமைந்ததால் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சாக்கடை நீராக மாறிவிட்டது, நல்லா இரு பல இடங்களில் ஆக்கிரமிப்புகளால் ஆறு 90 சதவீதம் சுருங்கி குறுகளாக காணப்படுகிறது, ஏறத்தாழ 150 அடி முதல் 250 அடி அகலம் வரை சென்று கொண்டிருந்த நல்லாறு தற்போது சாக்கடை ஆறாக ஆக்கிரமிப்புகளால் குறுகி செல்கிறது, பல இடங்களில் குழாய்களை பதித்து தொழிற்சாலைகளில் இருந்து கழிவுநீர் நேரடியாக நல்ல ஆற்றில் கலக்கிறது, இதனை பொதுப்பணித் துறை அதிகாரிகள் கண்டும் காணாமல் இருந்து வருகின்றனர், ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் காலம் கடத்தி வந்துள்ளனர், இந்த நிலையில் நீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து கடந்த 2017 ஆம் ஆண்டு நல்லாற்றின் ஓடைப்பகுதியில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள 147 வீடுகளை அகற்றிக் கொள்ள வேண்டும் என நோட்டீஸ் வழங்கினர், தொடர்ந்து கடந்த 2022 ஆம் ஆண்டு இந்த வீட்டில் இருப்பவர்களுக்கு மாற்றாக அடுக்கு மாடி குடியிருப்பில் வீடுகள் தருவதாக கூறினர், ஆனால் அதில் வசிக்கக் கூடிய மக்கள் தங்களுக்கு வீடு வேண்டாம் இடத்தை தாருங்கள் என கோரிக்கை விடுத்தனர் இந்த நிலையில் கடந்த 2025 ஆம் ஆண்டு செட்டிபாளையம் பகுதியில் 39 நபர்களுக்கு தலா 2 லட்சம் பணத்தை செலுத்தி அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகள் வழங்க பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்தனர் அதில் 12 பேர் மட்டும் பணத்தை செலுத்தினர் ஆனால் அவர்கள் அந்த அடுக்கு மாடி குடியிருப்பு செல்லாமல் ஓடை புறம்போக்கு பகுதியில் உள்ள வீட்டிலேயே இருந்து வந்துள்ளனர், அடுக்கு மாடி குடியிருப்பில் போதிய அடிப்படை வசதிகள் கூட இல்லை என குற்றச்சாட்டு தெரிவித்து இங்கேயே இருந்துள்ளனர்,

மறுபுறத்தில் பின்னலாடை ஏற்றுமதி நிறுவனம் ஒன்று காம்பவுண்ட் சுவரை நல்லாற்றை ஆக்கிரமித்து கட்டி உள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளனர் எங்களது வீடுகளில் இடிப்பதற்கு முன்பாக மற்றொரு கடையில் உள்ள பின்னலாடை நிறுவனத்தின் காம்பவுண்டு சுவர் ஆக்கிரமிப்பு அகற்றிய பின்னர் எங்களது வீடுகளை இடியுங்கள் எனக் கூறி ஏழைக்கு ஒரு நீதியும் பணக்காரர்களுக்கு ஒரு நீதியா என பொதுமக்கள் ஆவேசம் அடைந்தனர், இதனால் நல்லாற்றின் கரை ஓரம் ஆக்கிரமிப்பு அகற்ற வந்த நீர்வளத்துறை அதிகாரிகள், போலீசார் இடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது, நல்லாற்றின் இரு கரைகளும் பெருமளவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் ஆற்றின் அகலம் மிகவும் சுருங்கிப்போ யுள்ளது. நல்லாற்றின் குறுக்கே உள்ள ஆக்கிரமிப்புகளைத் துல்லியமாகக் கண்டறிந்து அவற்றை அகற்றுவதற்காக, தமிழக நீர்வளத்துறை (WRD) உலகளாவிய இயற்கை நிதியத்துடன் (WWFIndia) இணைந்து ட்ரோன் (Drone) மூலம் நவீன ஆய்வு நடத்தத் திட்டமிட்டு அதுவும் கிடப்பில் உள்ளது குறிப்பிடத்தக்கது. நீர்வளத் துறை அதிகாரிகள் ஆற்றின் இரு புறங்களிலும் உரிய ஆய்வை நடத்தி ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.

## ராஜினாமா செய்த 4 எம்.எல்.ஏ.க்களுக்கு சபாநாயகர் நோட்டீஸ்..

### 7 நாட்களுக்குள் விளக்கம் அளிக்க உத்தரவு



சென்னை, ஜூன் 13

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 17வது சட்டசபை தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. முதல்அமைச்சராக பொறுப்பேற்றுள்ள அக்கட்சியின் தலைவர் விஜய் பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு, இரண்டிலும் வெற்றி பெற்றார். அதன்பின்னர், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை அவர் ராஜினாமா செய்தார்.

இதேபோல், சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க த.வெ.க. அரசுக்கு 25 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் ஆதரவு அளித்தனர். இதில், மரகதம் குமரவேல் (மதுராந்தகம்தனி), ஜெயக்குமார் (பெருந்துறை), சத்யபாமா (தாராபுரம்தனி), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்) ஆகியோர் தங்களது எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தனர்.

இந்த நிலையில், திருச்சி கிழக்கு, மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளை காலியானதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது. ஒரு தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டால், அந்த நாளில் இருந்து 6 மாதத்திற்குள் இடைத்தேர்தல் நடத்தியாக வேண்டும் என்று விதி உள்ளது.

அதன்படி, இந்த 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவதற்கான முன் தயாரிப்பு பணிகளை மேற்கொள்ள மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சூழலில் தமிழகத்தில் காலியாக உள்ள 5 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் தேதி அடுத்த மாதம் (ஜூலை) இறுதியில் அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்றும், ஆகஸ்டு மாதத்தில் தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் ராஜினாமா செய்த 4 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்தது ஏன்..? என்பது குறித்தும், 4 பேர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது..? என்பது குறித்தும் 7 நாட்களுக்குள் விளக்கம் அளிக்கவும் அவர்களுக்கு சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் உத்தரவிட்டுள்ளார்.

த.வெ.க.வுக்கு ஆதரவாக வாக்களித்த எம்.எல்.ஏ.க்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் அளிக்கப்பட்டிருந்தநிலையில் இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## திமுகவின் சாதனைகளுக்கு ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது தவெக அரசு உதயநிதி ஸ்டாலின் தாக்கு

சென்னை, ஜூன் 13

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

தேர்தல் பிரசாரத்தின் போது, தமிழ்நாடு ஏதோ படுகுழிக்குள் விழுந்தது போலவும், கடனில் தத்தளிப்பதாகவும் போலி கதைகளை தொகுப்பு செய்த இன்றைய முதல்அமைச்சர், டெல்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் சாதனைகள் என்று பெரும் பட்டியலை வாசித்து இருக்கிறார்.

இந்தியாவிலேயே 2 ஆவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு இருக்கிறது. இந்தியாவில் பணிக்குச் செல்லும் பெண்களில் 42 சதவீதம் மகளிர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், பெண் கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றில் முன்னேற்றம், மகளிர் சுய உதவி குழுக்களின் வளர்ச்சி என்று முதல்அமைச்சர் பேசி இருக்கிறார்.

இவை எல்லாம் அவருடைய ஒரு மாத கால சோபா மாடல் ஆட்சியில் நடந்த சாதனைகளா? அல்லது, 5 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளா? என்பதை முதல்அமைச்சர் விளக்க வேண்டும். தேர்தலுக்கு முன்பு 'நீட் மட்டும் தான் உலகமா?' என்று கேட்டவர், இப்போது நீட் விலக்கு கேட்டு, அவர் பேசியதற்கு அவரே மறுப்பு கூறியிருக்கிறார். டெல்லி வரை சென்றவர், நிதி ஆயோக் கூட்டத்திலோ, அல்லது கர்நாடாகாவில் ஆட்சி செய்யும் அவருடைய புதிய கூட்டணி கட்சியிடமோ மேகதாது பிரச்சினை பற்றி வாய் திறக்காமல் நமக்கெதுக்கு வம்பு என்று அமைதியாக திரும்பி இருக்கிறார்.

மொத்தத்தில், நிதிஆயோக்கூட்டத்தில் நம் கழக அரசின் சாதனைகளின் மீது முழுக்க முழுக்க ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது சோபா மாடல் அரசு! பொய்களையும், அவதூறுகளையும் அள்ளி வீசி, மக்களை ஏமாற்றி, நீங்கள் பெற்றிருக்கும் போலி வெற்றி நீண்ட நாள் நிலைக்காது சி.எம். சார். உண்மை நிச்சயம் வெல்லும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



## 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுடன் கலெக்டர் சந்திப்பு

நாகர்கோவில், ஜூன்.13

குமரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தின் சார்பில் மாவட்டத்திற்குட்பட்ட அரசுப்பள்ளிகளில் பயின்று 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்கள் மேற்படிப்பு மேற்கொள்வது குறித்த காஃபி வித் கலெக்டர்என்ற கலந்துரையாடல்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டு, மாணவ மாணவியர்களிடையே கலந்துரையாடி பேசியதாவது:

அரசுப்பள்ளிகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தகட்டமாக என்னென்ன உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதை நீங்களாகவே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இந்நிகழ்ச்சிக்கு வருகைதந்த ஒவ்வொரு மாணவ மாணவியர்களும் மருத்துவம், பொறியியல், செவிலியர்கள், வணிகவியல், கணினி, அரசியல் அறிவியல் மற்றும் கலை மற்றும் அறிவியல் சார்ந்த பாடங்கள் உள்ளிட்ட பல்வேறு பாடத்திட்டங்களை தேர்வு செய்து பயின்று, ஒரு நல்ல மருத்துவராக, பொறியாளர்களாக, விமானம் ஓட்டுபவர்களாக, வேளாண் விஞ்ஞானிகளாக ஆக வேண்டுமென்ற என்ற உங்களின் உயர்ந்த எண்ணங்களை என்னிடம் பகிர்ந்து கொண்டீர்கள்.

பள்ளி படிப்பு வாழ்க்கையின் ஒரு கட்டம்தான். அடுத்தகட்டத்தைதீர்மானிப்பது மேற்படிப்பு தான் என்பதை உணர்ந்து கல்வி கற்க வேண்டும். என்னுடைய பள்ளி படிப்பு காலக்கட்டத்தில் நான் ஒரு விஞ்ஞானியாக ஆக வேண்டும். பேராசிரியராக ஆக வேண்டும் என்ற கனவு இருந்தது. ஆனால் என்னுடைய அருகாமையில் உள்ள கிராமங்களில் உள்ளாட்சி தேர்தல்களில் சாதி கட்டமைப்பு ஒரு தடையாக இருப்பதை பார்த்து, இந்திய ஆட்சிப்பணியில் சேர்ந்து, அடித்தட்டு மக்களுக்காக பணியாற்ற வேண்டுமென்ற நோக்கில், விடாமுயற்சி மற்றும் கடின உழைப்புடனும் தேர்வினை எதிர்கொண்டு வெற்றி பெற்று, உங்களிடையே ஆட்சியராக பேசுகிறேன். சிறு வயதிலிருந்தே எனக்கு பத்திரிக்கை படிக்கும் ஆர்வம் அதிகமாக இருந்தது. படிப்பதோடு மட்டுமின்றி நாள்தோறும் நடக்கும் நிகழ்வுகளையும், பொது அறிவையும் நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக நகர்ப்புறங்களில் படித்தவர்கள் போன்று ஆங்கில புலமை நமக்கு இல்லையே உள்ளிட்ட பல்வேறு சூழல்கள் ஏற்படும் போது அவற்றையெல்லாம் பொருட்படுத்தமால், வாழ்வில் உயர்நிலையை பெற்று நம் பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் வகையில் திகழ வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். என கூறினார்.

### பெரியகுளம் நகராட்சி நகர்மன்ற கூட்டத்தில்

# தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு முன்னாள் முதலமைச்சரின் தம்பி வாழ்த்து



தேனி, ஜூன் 13

தேனி மாவட்டம் பெரிய குளம் நகராட்சியில் மாதாந்திர சாதாரண நகர் மன்ற கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நகர் பகுதியில் மேற்கொள்ளப் படவேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் வளர்ச்சிகள் குறித்து விவாதிக்கப்பட்டன. கூட்டத்தில் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் அவர்களது தம்பியும், 24 வது கவுன்சிலருமான ஓ. சண்முக சுந்தரம் பேசும் போது தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்று சிறப்பான முறையில் ஆட்சி புரிந்து வரும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ஜோசப் விஜய் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

மேலும் தமிழகத்தில் 717 அரசு மதுக் கடைகளை மூடி ஆணை பிறப்பித்துள்ளதை மனமுவந்து வரவேற்பதாகவும், மதுக்கடை குறைப்பு நடவடிக்கை வேண்டாம் , தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவர வேண்டும் என்றும், தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்களை தடுக்கும் வகையில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையை வரவேற்பதோடு, பெண்கள், மற்றும் குழந்தைகள் மீது தாக்குதல் நடத்துவோர் மீது மிக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும்,பெரியகுளம்நகராட்சிநிர்வாகத்தில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தங்களது கடமைகளை செய்ய தவறி வருகின்றனர். இதனால் மன்ற உறுப்பினர்களுக்கு கெட்ட பெயர் ஏற்படுகின்றது . பொது மக்களின் நலன் கருதி அரசு பணியை (கடமையை) செய்ய தவறிவரும் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பெரியகுளம் நகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு தடையின்றி சுத்தமான குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும்,

பாதாள சாக்கடை இணைப்பு, மற்றும் அடைப்பு நீக்க பணிகளுக்காக பொதுமக்களிடம் அதிக அளவில் லஞ்சம் வாங்குவதை தவிர்த்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வணிக ரீதியாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு தொழில் வரி விதிக்காமல் எதிர் பார்ப்பின் அடிப்படையில் வீட்டு வரி மட்டுமே விதிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டினார். . இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தி வரும் பில்டிங் செக்சன் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பெரியகுளம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் அம்மா உணவகம் உட்பட அனைத்து உணவகங்களிலும் சுகாதாரத்தினை பேணி காக்க, பொதுமக்களுக்கு சுகாதாரமான உணவு கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்வதோடு நாகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் உணவகங்களில் சாலையோரம் வைக்கப்பட்டுள்ள அடுப்புகளை பொதுமக்கள், பாதசாரிகள்,வாகன ஓட்டிகளின் நலன்கருதி அடுப்புகளை உணவகத்தினுள் வைத்து சமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மீறும் உணவகங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பெரியகுளம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சாலைகளில் ஏற்பட்டுள்ள குண்டும் குழியுமான பள்ளங்களை நகராட்சி நிர்வாகம் பொதுமக்கள் நலன் கருதி சரிசெய்து கொடுக்க முன்வராத நிலையில் தனது சொந்த செலவினில் ஆங்காங்கே பேட்ஜ் ஒர்க் செய்திட அனுமதி வழங்க வேண்டும் எனவும், நகர் பகுதிகளில் சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகள், ஆடுகள், கழுதைகள் மற்றும் நாய்களால் ஏற்படும் விபத்துகளை, அச்சுறுத்தல்களை தடுக்கும் வகையில் அவைகளைப் பிடித்து அவற்றின் உரிமையாளர்கள் மீது வழக்கு பதிந்தும் , அபராதம் விதித்தும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் நகர் பகுதிகளில் நாய் தொல்லைகள் அதிகரித்துள்ளது. கண் துடைப்பிற்காக பணி மேற்கொள்ளாமல் வெறிநாய் கடியில் இருந்து குழந்தைகள் பெண்கள் மற்றும் பொதுமக்களை காக்கும் வகையில் நாய்களை பிடித்து கட்டுப்படுத்த வேண்டும் என்றும், நகர் பகுதிகளில் செயல்பட்டு வரும் உரிமம் மற்றும் உரிமம் இல்லாத இறைச்சிக் கடைகள், தேனீர் விடுதிகள், ஹோட்டல்களில் உணவு பொருட்களை நியூஸ் பேப்பர்களில் வழங்குவதை தடுத்திடவும், சுற்றுச்சூழலை காக்கும் வகையில், பாலிதீன் பயன்பாட்டை குறைத்திடும் வகையில் வாழை இலை, தேக்கு இலைகளில் இறைச்சிகளை வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தார்.

### புதுக்கடை அருகே

# தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை; 2 பேர் கைது

புதுக்கடை, ஜூன். 13

புதுக்கடை சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள கடைகளில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை நடைபெறுவதாக எழுந்த புகாரின் பேரில் புதுக்கடை சப்இன்ஸ்பெக்டர் செல்வராஜ் தலைமையிலான போலீசார் அந்த பகுதிகளில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது பார்த்திபபுரம் பகுதியில் உள்ள ஒரு பெட்டி கடையில் சோதனை செய்தபோது அங்கு அரசால் தடை செய்யப்பட்ட கணேஷ் புகையிலை 13 பாகெட்டுகளும். கூல் லிப் புகையிலை 6 பாக்கெட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டு, கடை உரிமையாளர் தங்கம் (69)என்பவர் கைது செய்யப்பட்டார்.

இது போன்று கீழ்குளம் பகுதியில் ஆனான்விளை என்ற இடத்தில் ஸ்டான்லி ( 64) என்பவரின் பெட்டி கடையில் சோதனை செய்த போது, தமிழ் அரசால் தடை செய்யப்பட்ட கணேஷ் புகையிலை 24 பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. போலீசார் ஸ்டான்லியை கைது செய்தனர். இது குறித்து புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.




இராமநாதபுரம் மாவட்ட புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக பதவி ஏற்றுள்ள உயர்திரு.மா.சிவகுரு பிரபாகரன்அவர்களைமு.மண்டபம்ஒன்றியகவுன்சிலரும், அதிமுக மண்டபம் மேற்கு ஒன்றிய கழக செயலாளருமான RG.மருதுபாண்டியன் அவர்கள் நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினார்.

# முதல்வர் இளைஞர் விருது பெற விண்ணப்பிக்க அழைப்பு



தஞ்சாவூர் ஜூன் 13

முதல்வர் மாநில இளைஞர் விருது பெற விண்ணப்பிக்கலாம் என மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் மேலும் தெரிவித்து இருப்பதாவது:

சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களின் பணியை அங்கீகரிக்கும் வகையில் முதல்வர் மாநில இளைஞர் விருது ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 வயது முதல் 35 வயதை வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது .இந்த விருது ரூபாய் ஒரு லட்சம் ரொக்கமும், பாராட்டு பத்திரமும், பதக்கமும் ஆகியவற்றுடன் வழங்கப்படுகிறது.

இந்த விருதுக்கு 15 வயது முதல் 35 வயது வரை உள்ள ஆண் பெண் விண்ணபிக்கலாம்.ஏப்ரல் 1, 2025 அன்று 15 வயது நிரம்பியதாகவும் மார்ச் 31, 2026 அன்று 35 வயதுக்கு ள்ளாகவும், இருத்தல் வேண்டும் . கடந்த நிதியாண்டில் (1.4.2025 முதல் 31.3.2026 மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மற்றும் கருத்தில் கொள்ளப்படும். குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருக்க வேண்டும். அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண் டு, கண்டறியப்பட கூடியதாகவும் அளவிடக்கூடியதாகவும் இருக்க வேண்டும் தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையத்தின் இணைய தளமானwww.sdat.tn.gov.in மூலம் ஜூலை 6ம் தேதி மாலை 5:45க்குள் விண்ணப்பிக்க வேண்டும்

மேலும் மாவட்ட கலெக்டரின் பரிந்துரைக்கு அனுப்புவதற்கு விண்ணப்பத்தின் 3 நகல்களைதஞ்சாவூர்மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நேரில் அளிக்க வேண்டும் .மேலும் விவரங்களுக்கு அன்னை சத்யா விளையாட்டு அலுவலகத்தை 04362235633, 7401703496 ஆகிய எண்களின் வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.



கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில், தொழிலாளர் நலத்துறை சார்பாக, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு, விழிப்புணர்வு பேரணி மற்றும் கையெழுத்து இயக்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன், துணை ஆட்சியர் பயிற்சி .சாய் சைதன்யா ஜாதவ் தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர்கள் .ராஜசேகரன் அமலாக்கம் .மாதேஸ்வரன் சமூக பாதுகாப்பு திட்டம் .தாசரதி சமரசம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### குமரி

# தந்தை மார்ஷல் நேசமணி பிறந்த நாள் அவரது திருவுருவ சிலைக்கு ஆட்சியர் மரியாதை



நாகர்கோவில், ஜூன்.13

குமரி தந்தை என மக்களால் போற்றப்படுபவர் மார்ஷல் நேசமணி. “குமரி தந்தை”, ” கன்னியாகுமரி மாவட்டத்தின் சிற்பி “, ‘ மார்ஷல் “ என அனைத்து மக்களால் புகழப்பட்டு வரும் மாபெருந் தலைவர். குறிப்பாக ‘ பெரியவர் “ என பெரியவர்களால் போற்றப்படும் பெருமைமிக்க தலைவர், நீதிக்காக போராடிய நெஞ்சுரமிக்க தலைவர், நேர்மையோடு வாழ்ந்து காட்டிய தலைவர். இவரது 132வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கீழ் நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பில் அமைந்துள்ள மார்ஷல் நேசமணி மணிமண்டபத்திலுள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்து மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் உதவி ஆட்சியர்பயிற்சி மோனிகா, நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண் ஜெகத் பிரைட், மார்ஷல் நேசமணி மகன்வழி பேரன் ரெஞ்சித் அப்பலோஸ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) செல்வலெட்சுஷ்மா, நாகர்கோவில் மாநகராட்சி செயற்பொறியாளர் ரகுராம், நாகர்கோவில் மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.சரோஜா, மாமன்ற உறுப்பினர் விஜிலா ஜஸ்டஸ், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.



# பஞ்சப்பள்ளியில் மக்கள் திட்ட முகாம் ஆட்சியர் எம் எல் ஏ பங்கேற்பு

தருமபுரி ஜூன் 12

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் பஞ்சப்பள்ளி கிராமத்தில் தருமபுரி மாவட்ட நிர்வாகம் மற்றும் வருவாய் & பேரிடர் மேலாண்மை துறை சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சியர் வே. சரவணன் தலைமையிலும், மாவட்ட வருவாய்அலுவலர் முன்னிலையில் நடைபெற்றது . இந்த திட்ட முகாமில் பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் கே.பி.அன்பழகன் கூறியதாவது. பாலக்கோடு சட்டமன்ற தொகுதி மக்களின் ஐம்பது ஆண்டு கால கோரிக்கையான ஆழியாளம் அணைக்கட்டிலிருந்து தூள் செட்டி ஏரிக்கு பாசன நீர் கொண்டு வருதல், எண்ணெய்க்கொள்புதூர் தும்பல அள்ளி அணைக்கு பாசன வசதி கொண்டு வருதல், ஜெர்த்தலாவ் ஏரியிலிருந்து புலிகரை ஏரிக்கு நீர் கொண்டு வருதல் போன்ற கோரிக்கைகளை காலதாமதம் இன்றி உடனடியாக பணிகளை மேற்கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தினார். இந்த முகாமில் வருவாய் துறையின் சார்பில் 93 பேருக்கு ரூ. 61. 27 லட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனை பட்டா, மின்னணு குடும்ப அட்டைகள் உள்ளிட்ட நல திட்ட உதவிகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 12 பேருக்கு ரூ.2. 11 லட்சம் மதிப்பீட்டில் சலவைப் பெட்டி, முஸ்லிம்

பெண்களுக்கான நலத்திட்ட உதவிகள், சுகாதார துறையின் சார்பில் 10 பேருக்கு ரூ. 20 ஆயிரத்தில் கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகங்கள், மகளிர் திட்டம் சார்பில் 20 பேருக்கு ரூ 11.10 லட்சம் மதிப்பில் சிறு தொழில் தனிநபர் கடன் உதவிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் மொத்தம் 153 பேருக்கு ரூ 84.24 லட்சம் மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் சரவணன் வழங்கினார். இந்த முகாமில் மகளிர் திட்ட இயக்குனர் சுந்தர்ராஜன், உதவி ஆட்சியர் காயத்ரி சமூக பாதுகாப்பு திட்ட தனித் துணை ஆட்சியர் செல்வி, மாவட்ட வழங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கோவிந்தன், களால் உதவி ஆணையர் கோப்பு ,மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பண்டரிநாதன், தாசில்தார் அசோக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மண்டைக்காடு அருகே

# 10 மாத கைக்குழந்தை திடீர் சாவு: அதிகாரிகள் ஆய்வு

குளச்சல், ஜூன். 13

மண்டைக்காடு அருகே கோவிலான் விளையை சேர்ந்தவர் ரெதீஷ் (37). எலக்ட்ரீசியன். இவருக்கு திருமணமாகி 6 ஆண்டுகள் குழந்தை இல்லாமல் இருந்தது. தற்போது பெர்ஜின் ஜிஜின் என்கிற பத்து மாத ஆண் குழந்தை பிறந்துள்ளது.இந்த நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு குழந்தைக்கு தொடர் வயிற்றுப்போக்கு இருந்து வந்தது. இதற்காக குளச்சலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

குழந்தைக்கு மீண்டும் கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. உடனடியாக மீண்டும் அதே ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றுள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் திடீரென குழந்தையின் நிலை மோசமாகி உள்ளது. உடனடியாக டாக்டர்கள் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆம்புலன்ஸ் மூலம் உடனடியாக மருத்துவ கல்லூரி கொண்டு சென்றனர். அங்கு குழந்தையை பரிசோதித்த டாக்டர்கள் குழந்தை இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து மண்டைக்காடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். குழந்தை ஏதாவது வைரஸ் தொற்றினால் இறந்ததா? என்பதை உறுதிப்படுத்துவதற்காக ரெதிஷின் வீடு மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் சுகாதாரத் துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர்.




### தென்காசியில்

# பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திய சிங்கப்பெண் அதிரடிப்படையினர்

தென்காசி, ஜூன்.13

தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் பெண்களுக்கு எதிரான குற்றங்களை முன் கூட்டியே தடுத்து நிறுத்துகின்ற வகையில் சிங்கப்பெண் அதிரடி படை தமிழக முதல்வர் ஜோசப் விஜயால் தொடங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தென்காசி மாவட்டத்திலும் சிங்கப்பெண் அதிரடிப்படையினர் பெண்கள் அதிகம் கூடும் இடங்களான ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவை முன்பாக கண்காணிப்பு மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தொடர் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில்பழையபேருந்துநிலையத்தில் ரோந்து பணியில் ஈடுபட்ட சிங்கப்பெண் அதிரடிப்படை உதவி ஆய்வாளர் மாணிக்க செல்வி, பெண்களிடம் பேசுகையில் தங்கள் பகுதிகளில் நடைபெறும் குழந்தை திருமணம் மற்றும் பெண்களுக்கு எதிரான அநீதிகள்,

பாலியல் சீண்டல்கள் மற்றும் சமூக வலைதளங்கள் வாயிலாக கேலி கிண்டல்கள் உள்ளிட்டவைகள் குறித்து உடனடியாக தகவல் தெரிவித்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் பெண்கள் புகார் தெரிவிக்க தயங்கி நிற்க வேண்டாம் எனவும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 100,1091 ஆகிய பெண்களைதொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம். அந்த வகையில் தற்போது தென்காசி மாவட்டத்திலும் சிங்கப்பெண் அதிரடி படை அதிரடியாக உள்ள நிலையில் பெண்கள் தைரியமாக சுதந்திரமாக இருக்கலாம் என விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.



## கோவையில்

# அரசுப் பொருட்காட்சியினை அமைச்சர் ராஜ்மோகன் திறந்து வைத்தார்

கோவை ஜூன்:13

கோவை வ.உ.சி மைதானத்தில்செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அரசுப் பொருட்காட்சியினை பள்ளிக்கல்வி தமிழ் வளர்ச்சி செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன்துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில்,பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் வி.சம் பத்குமார்தலைமை வகிக்கிறார். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர், மாநகராட்சி மேயர்,மாநகராட்சிஆணையாளர்,நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் கள்அரசுத்துறை அலுவலர்கள்,முக்கிய பிரமுகர்கள்,உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர்கள் கலந்து கொண் டனர்.



தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் வட்டத்தில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நீதி திட்டம் 2025 2026 கீழ் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சக்திவேல், தனலட்சுமி, உதவி பொறியாளர் இளவேனில் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



## தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் தலைமையில்

# குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு உறுதிமொழி ஏற்பு

தஞ்சாவூர் ஜூன் 13

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத் தை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் உறுதி மொழியினை அனைத்து துறை அலுவலர்கள் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதிமொழி வாசிக்க , அனைத்து துறை அலுவலர்களும்அதனைபின்தொடர்ந்து வாசித்தனர். அதனைத் தொடர்ந்து மாவட்ட கலெக்டர் ரேவதி உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத் தை முன்னிட்டு விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை தொடங்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) தவசெல்வம், தொழிலாளர் உதவி ஆணையர்கள்(அமலாக்கம்) ஆனந்த்,(சமூக பாதுகாப்பு திட்டம்) நடராஜன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்



## குமரியில் தொடர் மழை

# திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

மார்த்தாண்டம், ஜூன்.13

கன்னியாகுமரி மாவட்டத்தின் குற்றாலம் என திற்பரப்பு அருவியை அழைக்கின்றனர். இந்த அருவியில் ஆண்டில் அனைத்து நாட்களிலும் தண்ணீர் அருவி வழியாக விடுவதால் சுற்றுலா பயணிகள் ஏராளம் பேர் வந்து செல்கின்றனர். இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் குமரி மாவட்டம் வரும் சுற்றுலா பயணிகள் திற்பரப்பு அருவிக்கும் வருவது வழக்கம்.

இந்த நிலையில் குமரியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பருவமழை பெய்து வருகிறது. இதனால் மலையோர பகுதிகளில் மழையின் தீவிரம் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலையோர பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் ஆறுகள், நீர் நிலைகள் மற்றும் குளம், குட்டைகளில் தண்ணீர் வரத்து அதிகமாக காணப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் விடிய விடிய கன மழை பெய்தது. இதனால் கோதையாற்றில் நீர் வரத்து மேலும் அதிகரித்தது. இதனால் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு கருதி அருவியில் குளிக்க திற்பரப்பு பேரூராட்சி நிர்வாகம் தடை விதித்துள்ளது. மேலும் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க செல்லாமல் இருக்க தடுப்பு வேலிகள் அமைத்து காவல்துறை மற்றும் பேரூராட்சி ஊழியர்கள் கண்காணித்து வருகின்றனர்.



தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் ஒன்றியம் சின்ன மாட்லாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஊரக கட்டிடங்கள் பராமரிப்பு திட்டத்தின் கீழ் பழுதடைந்த நிலையிலிருந்த பள்ளியின் மேற்கூரை பழுது பார்க்கும் பணியினை மாவட்ட ஆட்சியர் சரவணன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சக்திவேல், தனலட்சுமி, உதவி பொறியாளர் இளவேனில் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தஞ்சாவூரில்

# சுகாதாரத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம்

## பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ரத்த சோகை பரிசோதனை கலெக்டர் தகவல்



தஞ்சாவூர் ஜூன் 13

தஞ்சாவூரில் சுகாதாரத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்ட த்தில் அனைத்து பள்ளி, கல்லூரி மாணவிகளுக் குரத்த சோகை பரிசோதனை நடத்த திட் டமிடப் பட்டுள்ளது என்று கலெக்டர் ரேவதி தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் மருத்து வமனை சுகாதாரப்பணிகள் குறித்து சுகாதாரத்துறை அலுவலர் களுக்கான ஆய்வுக்கூட்டம் நடை பெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமை தாங்கினார்

இந்த கூட்டத்தில் அனைத்து சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி கள் பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு பதிவான தாய் மற்றும் சேய் இறப்புகள் அவற்றிற்கான முக்கிய காரணங்கள், தாய் இறப்பு விகிதம் மற்றும் சேய் இறப்பு விகிதம் ஆகியவற்றை மேலும் குறைப்பதற் கான நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப் பட்டது

மேலும் இளம் பருவத்தினருக்கு ரத்த சோகை பரிசோதனை கண்ட றிய அனைத்து பள்ளி, கல்லூரி களில் பயிலும் மாணவிகளுக்கு பரிசோதனை நடத்த திட்டமிடப்பட்டு ள்ளது .காசநோய் கண்டறிதல் மற்றும் பரிசோதனை நடவடிக்கை கள் பல்வேறு சுகாதார திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் அவற்றில் உள்ள இடைவெளிகள் குறித்து விவரிவாக விவாதிக்கப் பட்டது

சுகாதார குறியீடுகளை மேம்படுத் தும் வகையில் அனைத்து அலுவல ர்களும் ஒருங்கிணைந்து செயல் பட்டு கண்டறியப்பட்ட குறைபாடு களை உடனடியாக சரி செய்து திட்டங்களில் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என கலெக்டர் அறிவுரை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் இணை இயக்குனர் (மருத்துவம்) முருகப்பன், மாவட்ட சுகாதார அலுவலர் கலைவாணி துணை இயக்குனர் (மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை) டாக்டர்அன்பழகன்,துணை இயக்குனர் (காச நோய்) மாதவி, இராசா மிராசு தார் மருத்துவமனைதுணை இயக்குனர் (தொழுநோய்) குணசீலன், மகப்பேறு டாக்டர் அமுதா மற்றும் குழந்தை கள்நல டாக்டர் செல்வகுமார்,கண்புரை தடுப்பு மாவட்ட அலுவலர் ராஜா, மாநகர் நல அலுவலர் வீராசாமி, அனைத்து மருத்துவமனை தலைமை மருத்துவர் கள், வட்டார மருத்துவ அலுவலர்கள், சுகாதார அலுவலக இரண்டாம் நிலை அலுவலர்கள், எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



## தேங்காப்பட்டணத்தில்

# 2 கார்களில் கேரளாவுக்கு கடத்திய 1800 லிட்டர் மண்ணெண்ணெய் பறிமுதல்

புதுக்கடை, ஜூன்.13

கன்னியாகுமரி மாவட்ட கடலோர பகுதி மீனவர்களின் மீன் பிடி படகுகளுக்கு அரசு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கி வருகிறது. இந்த மண்ணெண்ணெயை கடத்தல் பேர்வழிகள் அதிக விலைக்கு கேரளாவுக்கு கடத்தி செல்வது தொடர்ந்து நடை பெற்று வருகிறது. கடத்தல் மண்ணெண்ணெயை போலீசார் மற்றும் தனி அதிகாரிகள் மூலம் பிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்று இரவு 9.30 மணியளவில் மாவட்ட பறக்கும் படை தனி வட்டாட்சியர் கெ.எம் பாரதி தலைமையில், துணை வட்டாட்சியர் முத்துப்பாண்டி, ஓட்டுனர்ஜாண்பிரைட் உள்ளிட்ட பறக்கும் படை குழுவினர் கிள்ளியூர் வட்டார பகுதிகளில் பொது வினியோக திட்ட கடத்தல் தடுப்பு ரோந்து பணியில் இருந்தனர். அப்போது தேங்காப்பட்டணம் என்ற இடத்தில் சந்தேகத்திற்கு வந்து கொண்டு இருந்த கேரளா பதிவெண் கொண்ட 2 சொகுசு கார்களை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது சொகுசு கார்களில் உள்ள டிரைவர்கள் காரை நிறுத்திவிட்டு தப்பி ஓடினர்.

இதில் ஒரு கடத்தல் வாகனத்தில் 1200 லிட்டர் மீனவர்களுக்கு மானியவிலையில் அரசால் வழங்கப்படும் வெள்ளை நிற மண்ணெண்ணெயும், கண்டுபிடிக் கப்பட்டது..

மற்றொரு கடத்தல் காரில் 600 லிட்டர் மீனவர்களுக்கு மானியவிலையில் அரசால் வழங்கப்படும் வெள்ளை நிற மண்ணெண்ணெய் இருந்தது கண்டு பிடிக்கப் பட்டது. இவற்றை கேரளாவுக்கு கடத்தி செல்ல இருந்தது தெரிய வந்தது. இரண்டு சொகுசு கார்களில் இருந்தும் மொத்தம் 1800 லிட்டர் மீனவர்களுக்கு மானியவிலையில் அரசால் வழங்கப்படும் வெள்ளை நிற மண்ணெண்ணெய் கைப் பற்றப்பட்டது.

கைப்பற்றபட்ட மண்ணெண்ணெயை தூத்தூர் சின்ன துறை மீனவர் கூட்டுறவு சங்க கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டது. வாகனம் கிள்ளியூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டது.

## தஞ்சாவூரில்

# திரைப்பட இயக்குனர் பாரதிராஜாவுக்கு தமிழ் தேசிய பேரியக்கம் வீரவணக்கம்



தஞ்சாவூர் ஜூன் 13

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகே திரைப் பட இயக்குனரும், தமிழர் உரிமைப் போராளியுமான பாரதிராஜாவின் மறைவையொட்டி தமிழ்த் தேசிய பேரியக்கம் சார்பில் வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தமிழ் தேசிய பேரியக்கத் தலைவர் மணியரசன் தலைமை வைத்தார். இதில் பாரதி ராஜா படத்திற்கு அனைவரும் மலர் தூவி வீரவணக்கம் செலுத்தினர்.

நிகழ்வில் காவிரி உரிமை மீட்புக் குழு பொருளாளர் மணிமொழியன், தமிழ் தேசிய பேரியக்க மாவட்ட செயலாளர் வைகறை, தலைமை குழு உறுப்பினர் ராஜேந்திரன், தென்னவன், மாநகர செயலாளர் ராமசாமி, முனியாண்டி, நாம் தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் அன்பரசன், வள்ளலார் பணியகத் தலைவர் சுந்தரராமன், மகளிர் ஆயம் துணைத் தலைவர் செம மலர் ,காவிரி உரிமை மீட்பு குழு வெள்ளம் பெரம்பூர் ரமேஷ், வணிகர் சங்க பேரவை மாநகர செயலாளர் ஜெயக்குமார், பேராசிரியர் தமிழடியான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அருமனை அருகே

# மலை கிராமத்தில் மீண்டும் புகுந்த யானை கூட்டம்; பழங்குடி மக்கள் அச்சம்

மார்த்தாண்டம், ஜூன். 13

அருமனை அருகே ஒருநூறாம்வயல், வண்ணாத்தி பாறை பகுதிகளில் அதிக அளவில் மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். மலைப்பகுதியை ஒட்டி இந்த கிராமங்கள் அமைந்துள்ளதால் அவ்வப்போது மலையிலிருந்து வெளியேறும் காட்டு யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகள் ஊருக்குள் வருவது வாடிக்கையாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் வனத்தில் இருந்து வெளியே வந்த யானைகள் கடந்த சில நாட்களாக வண்ணாத்தி பாறை கிராமத்துக்குள் புகுந்து விளைநிலங்களை நாசம் செய்து வருகின்றன. இதன்படி நேற்று முன்தினம் இரவு வண்ணாத்திப் பாறை பகுதிக்கு வந்த 4 காட்டு யானைகள் பழங்குடி மக்கள் குடியிருப்பு பகுதியில் முகாமிட்டன.

இதனால் அதிர்ச்சி அடைந்த மக்கள் உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற வனத்துறையினர் மேளம் அடித்தும், பட்டாசு வெடித்தும் குடியிருப்பு பகுதியில் புகுந்த யானைகளை வனப் பகுதிக்குள் விரட்டினர். எனினும் அந்த யானைகள் கிராமத்தில் நின்ற மரங்களை ஒடித்தும், பயிர்களை தின்று சேதப்படுத்திவிட்டு சென்றதாக கிராம மக்கள் கூறினர்.

மேலும் தற்போது இந்த யானை கூட்டங்கள் மேல் பகுதியில் நிற்பதாக கூறினர். இதனால் எந்த நேரத்திலும் யானைகள் மீண்டும் குடியிருப்பு பகுதியை நோக்கி படையெடுக்க வாய்ப்பு உள்ளதால், பழங்குடி மக்களுக்கு வனத்துறையினர் உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

# கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தி



கிருஷ்ணகிரி, ஜூன் 13

கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைப் பெற்ற ஜமாபந்தியில் பொதுமக்கள் கொடுத்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் தனி துணை ஆட்சியர் அபிநயா உறுதி

கிருஷ்ணகிரி ஜூன் 13: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, ஓசூர், தளி, அஞ்செட்டி, டேன்கனிக் கோட்டை, சூளகிரி, பர்கூர், ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய வட்டாச்சியார் அலுவலகங்களில் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் உத்தரவின்படி ஜமாபந்தி துவங்கியது.

கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் துவங்கிய ஜமாபந்தி நிகழ்ச்சியில் வேப்பனப்பள்ளி உள்வட்டத்திற் குட்பட்ட 28 கிராமங்களுக்கான ஜமாபந்தி மாவட்ட தனித் துறை ஆட்சியர் அபிநயா தலைமையில் நடைபெற் றது.

முதல் நாளான இன்று வேப்பனப்பள்ளி உள்வட்டத்திற் குட்பட்ட பதிமடுகு, கிருஷ்ணப்பன் நாய்க்கன் போடூர், இனாம்குட்டப்பள்ளி, தளிப்பள்ளி, தடதாரை, பொம்மரசனப்பள்ளி, தீர்த்தம், நாடுவனப்பள்ளி, தாசிரிப்பள்ளி, அளேகுந்தாணி, ஹலேகிருஷ்ணாபுரம், நேரலகிரி, எட்டிப்பள்ளி, கங்கோஜிகொத்தூர், தேவர்குந்தாணி, ராகிமாகனப்பள்ளி, தங்காடிகுப்பம், மணவார்னபள்ளி, சிங்கிரிப்பள்ளி, கொல்லப்பள்ளி, சீரனப்பள்ளி, எப்ரி, கச்சிருகானப்பள்ளி ஆகிய 28 வருவாய் கிராமங்களுக்குட்பட்ட பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, பட்டா மாற்றம், உட்பிரிவு பட்டா மாற்றம், வீட்டுமனை பட்டா, பட்டா ரத்து, ஆக்கிரமிப்பு, நில அபகரிப்பு, புதிய குடும்ப அட்டை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு மனுக்களை மாவட் தனித்துறை ஆட்சியர் அபிநயா பெற்றுக்கொண்டு தகுதியான மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அப்போது வட்டாச்சியர் ரமேஷ், துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.



# கைத்தறி இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்தால் கடும் நடவடிக்கை

## ஈரோடு மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை

ஈரோடு ஜூன் 13

ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது ஈரோடு மாவட்டத்தில் ஜவுளித் தொழில் அதிகளவு நடக்கிறது. கைத்தறி தொழிலையும், நெசவாளர்களையும் காப்பாற்றும் நடவடிக்கையாக, கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் உள்ளது. இதை அமல்படுத்த ஏதுவாக ஈரோடு சூரம்பட்டியில் அமலாக்கப் பிரிவு அலுவலகம் இயங்குகிறது.

கைத்தறிக்கு என பேட்டு, பார்டர் டிசைனில் பருத்தி மற்றும் பட்டுசேலை, வேட்டி, துண்டு, லுங்கி, பெட்ஷீட், டிரஸ் மெட்டிரியல், ஜமக்காளம், கம்பளிகள், ஷால், உல்லன் ட்வீட், மற்றும் சந்தர் உள்ளிட்ட 11 இரகங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன, மேற்படி இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வது கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டப்படி குற்றம் ஆகும். மேற்படி கைத்தறி இரகங்கள் விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படுவது குறித்து அமலாக்க ஆய்வுக் குழு மூலம் தினசரி ஆய்வு நடத்தி வருகின்றனர். ஆய்வின்போது தவறுகள் கண்டறியப்பட்டால் காவல் நிலையத்தில் புகார் செய்து நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்திருத்தப்படி ரூ. 10,000 அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கப் படுகிறது. மேற்படி கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இரகங்கள் குறித்த விபரம் தேவை எனில், ஈரோடு அமலாக்க பிரிவு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### மொடக்குறிச்சி பகுதிகளில்

# இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் கட்டுமான பணிகள்

ஈரோடு ஜூன் 13

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அரச்சலூர், பத்தயம்பாளையம், வடுகப்பட்டி, ஈஞ்சம்பள்ளி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஆய்வு மேற்கொண்டார். அரச்சலூர் பேரூராட்சி அலுவலகம் அரச்சலூர் பேரூராட்சி மற்றும், பத்தயம் பாளையம் பகுதியில் குளம் தூர்வாரப்பட்டுள்ளதை பார்வையிட்டு குளத்தை சுற்றியுள்ள பகுதிகளில் மரக்கன்றுகள் நடவும், பசுமையான செடி, கொடிகள் வளர்க்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் சி.எஸ்.ஐ. நிதியுதவி துவக்கப்பள்ளியில் காலை உணவுத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவ, மாணவியர்கள் விபரம், உணவுப்பட்டியல் விபரம், உணவின் சுவை, தரம் மற்றும் பள்ளியில் அடிப்படை வசதிகள் குறித்தும், குழந்தைகளின் கற்றல் திறன் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். அரச்சலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், மருந்து இருப்பு மற்றும் கழிப்பறை, படுக்கை வசதி, மருத்துவ பயனாளர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறை குறித்து ஆய்வு மேற்கொண்டார். அரச்சலூர் பேரூராட்சியில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வாரச்சந்தையின் கட்டுமானப்பணிகளை பார்வையிட்டு, மேலும் கழிப்பிடம், குடிநீர், போன்ற அடிப்படை வசதிகளையும் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, வடுகப்பட்டி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ். செயல்பட்டு வரும், உரப்பூங்காவிற்கு சுற்றுச்சுவர் அமைக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து வடுகப்பட்டியில், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூ.12.10 கோடி மதிப்பீட்டில் 176 குடியிருப்புகளுக்கு மேற்கூரை அமைக்கப் பட்டு வரும் பணிகள் மற்றும் ஈஞ்சம்பள்ளியில் ரூ.9.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 144 குடியிருப்புகளுக்குவண்ணம்பூசப்பட்டு வரும் பணியினையும் என மொத்தம் ரூ.22 கோடி மதிப்பீட்டில் 320 குடியிருப்புகளை பார்வையிட்டு, பணிகளின் முன்னேற்றம், கட்டுமானப்பொருட்களின் தரம் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய இதரப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். ஈஞ்சம்பள்ளி மகளிர் சுய உதவிக்குழுவினர்கள் பாரம்பரிய முறையில் களிமண்ணை பதப்படுத்தி மண்பாண்டங்கள் மற்றும் கைவினைப் பொருட்களை தயாரிக்கும் முறை குறித்து பார்வையிட்டு குழுவினர்களிடம் கலந்துரையாடினார்.



# லட்சிய ஜனநாயக கட்சியில் 200 மாற்று கட்சியினர் இணையும் விழா

திருப்பூர்: , ஜூன் 13

லட்சிய ஜனநாயக கட்சி சார்பில் திருப்பூர் வெள்ளையங்காடு பகுதியில் உள்ளதனியார்திருமண மஹாலில் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மாற்று கட்சியினர் இணைப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் பின்பு அவரது தலைமையில் தென்னாடு மக்கள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் செந்தில் வாண்டையார் இந்து மக்கள் கட்சி மாநில செயலாளர் வேலு முருகன்.மற்றும் சின்னக்கரை பள்ளிவாசல் அப்பாஸ். தென்னாடு மக்கள் கட்சி மாநில பொருளாளர் காளிமுத்து உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோர் லட்சிய ஜனநாயக கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர் இணைந்தவர்களுக்கு விரைவில் பொறுப்பு வழங்குவதாக பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அவர்கள் தெரிவித்தார் முன்னதாக வெள்ளையங்காடுநாள்ரோடுசந்திப்பில் கட்சியின் கொடி கம்பத்தில் கொடியேற்றப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.....

### பளுகல் அருகே

# குழந்தையுடன் இளம்பெண் மாயம் கணவர் போலீசில் புகார்

மார்த்தாண்டம், ஜூன். 13

பளுகல் அருகே கண்ணுமாமூடு பகுதியை சேர்ந்தவர் லால்கிருஷ்ணன் (28). இவரது மனைவி வினிஷா (26). இவர்களுக்கு 3 வயதில் வைஷாக் என்ற மகன் உள்ளார். லால் கிருஷ்ணன் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன்பு ஊருக்கு விடுமுறைக்கு வந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவ தினம் லால் கிருஷ்ணன் தனது பைக்கில் சூழால் என்ற இடத்திற்கு சென்று விட்டார். அப்போது வீட்டில் இருந்த வினிஷா தனது மாமியார் ஜெயந்தியிடம கடைக்கு சென்று பொருட்கள் வாங்கி விட்டு வருவதாக கூறி மகனுடன் ஆட்டோவில் சென்றுள்ளார்.

அதன் பின்னர் அவர் வீடு திரும்பி வரவில்லை. தொடர்ந்து கணவர் மற்றும் மாமியார் வினிஷாவை பல்வேறு இடங்களில் தேடியும் அவர் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதை அடுத்து லால் கிருஷ்ணன் பளுகல் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் குழந்தையுடன் மாயமான இளம் பெண் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



### கன்னியாகுமரி நகராட்சி கூட்டம்

# சுமார் 1.50 கோடி ரூபாய் மதிப்பில் வளர்ச்சி பணிகளுக்கு அனுமதி

கன்னியாகுமரி,ஜூன்.13

கன்னியாகுமரி நகராட்சி கூட்டம் நேற்று நகராட்சி தலைவர் குமரி ஸ்டீபன் தலைமையில் நடைபெற்றது. நகராட்சி கூட்டத்தில் 1.50 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கன்னியாகுமரி நகராட்சி பகுதியில் வழங்கி வரும் புதியகுடிநீர்இணைப்பிற்கானசென்டேஜ்கட்டணத்தை 5 சதவீதம் உயர்த்தியும்,18 வார்டுகளிலும் குடிநீர் விநியோகம்செய்யும்பிரதானகுழாய்மற்றும்விநியோக குழாயில் ஏற்படும் பழுதுகளை சீரமைக்க 5 லட்சம் ரூபாய் பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யவும், நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம் செய்ய குடிநீரில் குளோரின் சீராக சென்றடைய இயந்திரம் மூலம் கலக்குவதற்கு 22 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் பொது நிதிலிருந்து அனுமதித்தும், அனைத்து வாடுகளிலும் தெருவிளக்கு பராமரிக்க 5 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்தும், திரிவேணி சங்கமம் பகுதியில் உள்ள ஹைமாஸ் விளக்கை சீரமைக்க 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அனுமதித்தும், குடிநீர் விநியோகம் செய்யும் திறந்தவெளி பொதுக்கிணறுகளின் மேல்மூடி அமைக்க 15 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தும், மேலும் கழிவுநீர் ஓடை, அலங்கார தரை தளம், புதிய குடிநீர் குழாய் பதித்தல், காங்கிரீட் தளம் மழைநீர் ஓடை சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக சுமார் 1.50 கோடி ரூபாய் மதிப்பிலான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் நகராட்சி பொறியாளர் முருகன், சுகாதார ஆய்வாளர் அந்தோணி, மேற்பார்வையாளர் பிரதீஷ், வருவாய் ஆய்வாளர் முகமது யூசுப், கள ஆய்வாளர் கார்த்திகேயன், நகராட்சி கவுன்சிலர்கள் சுபாஷ், மகேஷ், சுஜா, லிங்கேஸ்வரி, நித்யா, மெர்லின், சிவ சுடலைமணி, இக்பால், சகாயசர்ஜினாள், டெல்பின்ஜேக்கப், ஆனிரோஸ், ஆட்லின் ,பூலோகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.



### பர்கூர் தொகுதியின் பாட்டாளி மக்கள் கட்சியின்

# சட்டமன்ற பொறுப்பாளர் கனல் சிவா முன்னாள் சட்டமன்ற உறுப்பினரை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்

பர்கூர், ஜூன் 13

பர்கூர் தொகுதியின் பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற பொறுப்பாளர் கனல் சிவா பர்கூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரை ★ மரியாதை நிமித்தமாக★ சந்தித்தனர்

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக பர்கூர் தொகுதிக்கு உட்பட்ட பொறுப்பாளர்கள் இன்று திமுக மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகனை பர்கூர் தொகுதி செயலாளர் கனல் சிவா மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை அணிவித்தனர் இதில் ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# பயிற்சித் துறையின் பணிகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் சரத்குமார் ஆய்வு



சென்னை, ஜூன் 13

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாடு முதல்அமைச்சர் ச. ஜோசப் விஜய்யின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (12.06.2026) சென்னை அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் த. சரத்குமார் தலைமையில் பயிற்சித்துறையின் பணிகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் பயிற்சித்துறையின் மூலம் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைப்பயிற்சி, பணியிடைப்பயிற்சி, மற்றும் மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்குஅளிக்கப்படும்பயிற்சி குறித்து ஆலோசனை செய்யப்பட்டது. அமைச்சர் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்கான செயற்கை நுண்ணறிவு மற்றும் புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய பயிற்சிகள் வழங்க அறிவுறுத்தினார். மேலும், போட்டித் தேர்வுகள் பயிற்சி மையங்களின் மூலம் தேர்வர்களுக்கு பயிற்சியினையும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுரை வழங்கினார்.

அமைச்சர் அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியிலுள்ள பயிற்சி வகுப்பறைகள், பயிற்சியாளர்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டு பயிற்சியில் பங்கேற்ற அரசு அலுவலர்களுடன் பயிற்சி குறித்து கலந்துரையாடினார். அமைச்சர் அரசு அலுவலர்கள் தங்களுக்கு வழங்கப்படும் பயிற்சியினை முறையாக மேற்கொண்டு திறம்பட பணியாற்றி மக்களுக்கு சேவை புரிய வேண்டும் என தெரிவித்தார். மேலும் அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையத்திலுள்ள பயிற்சி வகுப்பறைகள், தேர்வர்கள் தங்கும் விடுதிகளை ஆய்வு மேற்கொண்டு தேர்வர்களுடன் பயிற்சி குறித்து கலந்துரையாடினார். இந்த ஆய்வின் போது மனிதவள மேம்பாட்டுத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் சி. சமயமூர்த்தி, அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரி, இயக்குநர்/பயிற்சித்துறை தலைவர் ச. கோபால சுந்தரராஜ், கூடுதல் இயக்குநர்கள், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில்

# வளர்ச்சி திட்டப்பணிகள்: கலெக்டர் ஆய்வு

நாகர்கோவில், ஜூன்.13

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட தெங்கம்புதூர், செம்மாங்குளம், வடசேரி உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளரச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து கலெக்டர் கூறியதாவது:

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட தெங்கம்புதூர் பகுதியில் அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.64.68 கோடி மதிப்பில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் தற்போது 85 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளது. இதன் வாயிலாக 24 மணி நேரமும் மநாகராட்சிக்குட்பட்ட பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க முடியும். கிருஷ்ணன் கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகில் மாநகராட்சி கல்வி நிதி 20252026 திட்டத்தின் கீழ் முதல்வர் படைப்பகம் ரூ.3.10 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் கட்டுமன பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக மாநகராட்சி சார்பில் குமரி மாவட்டத்திலேயே பசுமை சூழ்ந்த ஒரு எழில் மிகுந்த பகுதியாக மாற்ற வேண்டுமென்ற நோக்கில் நாகர்கோவில் மாநகராட்சியின் சார்பில் 6 வது மாநில நிதி ஆணைய நிதியின் 100 அண்டு பழமையான கீழ் 16 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள செம்மாங்குளத்தில் ரூ.6.59 கோடி மதிப்பில் தற்போது ஆரம்பிக்கப்பட்டு, தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த செம்மாங்குளமானது பொதுப்பணி நீர்வள ஆதாரத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. முக்கியமாக தூர் வாரும்போதுகுளத்தின்நீர்மட்டத்தினை குறையமால் பார்த்துகொள்ள வேண்டும். இருக்கிற நீர்மட்டத்தை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் குளங்களை சுற்றி ஆக்கிரமிப்பு பகுதிகள் இருந்தால், அது தொடர்பான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக செம்மாங்குளத்தில் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான இடம், பூங்கா, குளத்தின் ஒருபுறம் மின் விளக்குகள்அமைத்து, மரக்கன்றுகள் நட்டு பறவைகளுக்கான ஒரு சின்ன தீவு அமைத்தல் உள்ளிட்ட பணிகள் நடைபெறவுள்ளது. இப்பணிகள் அனைத்தையும் நான்கு ஐந்து மாதங்களுக்குள் முடித்திட நாகர்கோவில் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து மூலதன மாணிய நிதியின் கீழ் ரூ.8.95 கோடி மதிப்பில் வடசேரி பேருந்து நிலையம் பகுதியில் 100 கடைகள் கொண்ட மார்க்கெட் கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அம்மா உணவகம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திடவும், தரமானதாக இருப்பதை உறுதி செய்திடவும் அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வுகளில் நீர்வள ஆதாரத்துறை செயற்பொறியாளர் வசந்தி, நகர திட்டமிடுனர் பொறி.கெபின் ஜாய், மாநகராட்சி நிர்வாக பொறியாளர் பொறி.ரகுராமன், நகர்மன்ற உறுப்பினர் அக்ஷயா கண்ணன், பொறியாளர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வனத்துறை சார்பாக, ஓசூர் வனக்கோட்டத்தில்யானைகள்மின்சாரம்தாக்கிஉயிரிழப்பதைத்தடுக்கும்நடவடிக்கைகள் மற்றும் அவிட்டுக்காய் பயன்பாட்டைத் தடுப்பது குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், துணை ஆட்சியர் பயிற்சி .சாய் சைதன்யா ஜாதவ் , வன உயிரின காப்பாளர் .ஜெயராஜ் , உள்ளிட்ட பலர் உள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.